## மாணவர் ஆய்வுக்கருத்தரங்கம்

# தமிழரின் சிறுதெய்வ வழிபாடு

***21.02.2025*, வெள்ளிக்கிழமை**

**அறிவிப்பும் அழைப்பும்**



## தமிழாய்வுத்துறை

### தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி

(*A*++ தரத்தகுதியும் செயல்திறன் ஆற்றல் வளத் தனித்தகுதியும் சிறப்புத் தொன்மைத் தகுதியும் பெற்றது)

திருச்சிராப்பள்ளி - *620 002.*

**இனிய மாணவத் தோழர்களே!**

வணக்கம். தமிழகத்தின் நடுவமாம் திருச்சிராப்பள்ளியில் விளிம்பு நிலை மக்களின் முன்னேற்றத்தைத் தம் இலக்காகக் கொண்டு கல்விவழி மனிதம் வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ள தூய வளனார் கல்லூரி *(St.Joseph's College) 200* ஆண்டை நோக்கித் தம் கல்விப்பயணத்தைத் தொடர்ந்து வருகிறது. *2019*ஆம் ஆண்டு நடைபெற்ற தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவின் (நான்காம் சுற்று) மதிப்பீட்டில் *A*++ தகுதியைப் பெற்ற இந்தியாவின் முதல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்கிற பெருமையைப் பெற்ற எம் கல்லூரியின் தமிழாய்வுத்துறையின் ஆய்வுச்செயல்பாடுகளின் வரிசையில் *2020 - 2021*ஆம் கல்வியாண்டு முதல் மாணவர் கருத்தரங்கம் என்னும் முன்னோக்கு செயல்பாட்டைத் தொடங்கி நடத்தி வருகிறது.

தமிழ் இலக்கியத்தில் உடல் நலம் குறித்த பதிவுகள், இந்திய விடுதலைப் போரில் தமிழகம், சிறுதானியங்கள் குறித்த தமிழ் இலக்கியப் பதிவுகள், இக்காலக் கிறித்தவ இலக்கியப் படைப்பாளர்கள் ஆகிய பொருண்மைகளைத் தொடர்ந்து இந்த ஆண்டு **தமிழரின் சிறுதெய்வ வழிபாடு** என்னும் பொருண்மையில் மாணவர் கருத்தரங்கை *2025* பிப்ரவரி *21*ஆம் நாள் நடத்துவதற்குத் தமிழாய்வுத்துறை விழைகின்றது. எம் துறைப் பேராசிரியர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறும் இக்கருத்தரங்கை முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்டு வரும் எம் தமிழாய்வுத்துறை ஆய்வாளர்கள் ஒருங்கிணைத்து நடத்துகின்றனர்.

**கருத்தரங்கின் நோக்கம்**

உலகின் தொன்மையான வழிபாடாக இயற்கை வழிபாடு கருதப்படுகின்றது. ஆதிமனிதர்கள் உணவுத்தேவைக்காகவே அச்சத்தோடும் வியப்போடும் இயற்கையை வணங்கினர். இயற்கை வழிபாட்டின் தொடக்க நிலையில் இருந்து சிறுதெய்வ வழிபாடு தோன்றியது எனலாம். நாட்டுப்புற மக்களால் தொன்று தொட்டு வழிபடப்பட்டு வரும் கிராமத் தெய்வங்களே சிறுதெய்வங்கள் ஆகும். தம் வீட்டில் வாழ்ந்து மறைந்த முன்னோர்களை வழிபடுகின்ற குறிப்பிட்ட குடும்பத்தினரின் வீட்டுத்தெய்வம், தம் குலஅடையாளமாகக் கருதி ஒவ்வொரு குலத்தாரும் வணங்கும் குலத்தெய்வம், ஒரே மரபுவழிப் பட்ட குலத்தாரை ஒன்றிணைக்கும் இனத்தெய்வம், ஊரைக் காப்பவராகக் கருதி வணங்கப்படும் ஊர்த்தெய்வம், சமூகப் பாகுபாடுகளைக் கடந்து வணங்கப்படும் பொதுமக்கள் தெய்வம் எனச் சிறுதெய்வங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. இத்தெய்வங்கள் பரந்து பட்ட தொடர்பில்லாமல் கிராமங்களையே இருப்பிடமாகக் கொண்டு, நாட்டுப்புற மக்களின் மரபோடு நீங்காத உறவு கொண்டு விளங்குகின்றன.

இத்தெய்வங்களின் வரலாற்றையும் ஆற்றலையும் நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள் போன்ற வாய்மொழி வழக்காறுகள் போற்றியுரைக்கின்றன. நாட்டுப்புற மக்களின் அன்றாட வாழ்வியலோடும், பண்பாட்டு அடையாளங்களோடும் தொடர்புடைய சிறுதெய்வங்களைக் குறித்த களஆய்வின் வழியாக, தமிழர்தம் சிறுதெய்வ வழிபாட்டின் வரலாற்றையும் நீட்சியையும் கண்டறிவதே இக்கருத்தரங்கின் நோக்கமாக அமைகிறது.

**ஆய்வுக்களங்கள்**

சிறுதெய்வங்களுக்கு நிகழ்த்தப்படும் வழிபாடுகள், சடங்குமுறைகள், திருவிழாக்கள் ஆகியன குறித்துக் களஆய்வு செய்து கட்டுரை வெளியிடுவது சிறப்புக்குரியது. மேலும் தமிழிலக்கியப் பரப்பில் இடம்பெற்றுள்ள சிறுதெய்வ வழிபாடுகள் குறித்த பதிவுகள் குறித்தும் ஆய்வுகள் அமையலாம். .

**ஆய்வுக்கட்டுரை வழங்கும் முறை**

- மாணவர் கருத்தரங்கில் பல்கலைக்கழகங்கள் / கல்லூரிகளின் தமிழ்த்துறை முனைவர் பட்ட ஆய்வாளர்கள், முதுகலை, இளங்கலை மாணவர்கள் மட்டுமே கட்டுரையை அளிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.
- கருத்தரங்கப் பொருண்மையை அடியொற்றியே கட்டுரைகள் *A4* தாளில் 8 பக்க அளவில் *Arial Unicode MS* என்னும் ஒருங்குறியீடு *(Unicode)* எழுத்துருவில் *(Font Size 12 : Line Space 1.5)* கணினித் தட்டச்சு செய்து sjctamilstudentseminar@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
- ஒவ்வொரு கட்டுரையும் ஆய்வுச்சுருக்கம், கலைச்சொற்கள், முன்னுரை ஆகியவற்றைக் கொண்டு தொடங்கப் பெறுதல் வேண்டும். கட்டுரையின் இறுதியில் சான்றெண் விளக்கம், துணைநூற்பட்டியல் ஆகியவையும் இடம்பெறல் வேண்டும். கட்டுரைகள் அனைத்தும் தொகுக்கப்பெற்று வளன் ஆயம் என்னும் மின்னிதழில் வெளியிடப்படும். சிறப்பான கட்டுரைகளுக்குப் பரிசும் வழங்கப்படும்.

**பதிவுக்கட்டணம் : இல்லை**

**ஆய்வு கட்டுரைகள் வந்து சேர வேண்டிய இறுதி நாள் : 15.02.2025**

பதிவு செய்ய இணைப்பைச் சொடுக்கவும்.

https://forms.gle/zCWAgEkLkuyGpVUK6

**கருத்தரங்கக் குழுக்கள்**

**புரவலர்கள் :**

**அருள்முனைவர் பவுல்ராஜ் மைக்கேல்** சே.ச.
அதிபர், தூய வளனார் கல்வி நிறுவனங்கள்

**அருள்முனைவர் கு. அமல்** சே.ச.
செயலர், தூய வளனார் கல்லூரி

**அருள்முனைவர் சி. மரியதாஸ்** சே.ச.
முதல்வர், தூய வளனார் கல்லூரி

**முனைவர் ஜெ.ஜான் லவ் ஜாய்**
புலத்தலைவர், மொழிகள் மற்றும் பண்பாட்டுப் புலம்

**அமைப்பாளர் :**

**முனைவர் ஞா. பெஸ்கி,**
தமிழாய்வுத் துறைத்தலைவர்

**துணை அமைப்பாளர் :**

**முனைவர் க.சீனிவாசன்,**
ஒருங்கிணைப்பாளர், தமிழ்த்துறை (பணிமுறை-II)

**கருத்தரங்கச்செயலர் :**

**திருமிகு. சி.பாக்கிய செல்வ ரதி,**
துணைமுதல்வர் ( பணிமுறை-II)

**ஆலோசனைக்குழு :**

முனைவர் ஆ.ஜோசப் சகாயராஜ்
முனைவர் டே. வில்சன்
முனைவர் ஜா. பெஞ்சமின் ஆரோன் டைட்டஸ்
முனைவர் ஆ.ராஜாத்தி
முனைவர் சி.ஷகிலா பானு
முனைவர் ஆ.மரிய தனபால்
முனைவர் ரெ.நல்லமுத்து
முனைவர் கு.அந்தோணிராஜா
முனைவர் ஆ.அடைக்கலராஜ்
முனைவர் ஜா.சலேத்
முனைவர் சி.ஆரோக்கிய தனராஜ்
முனைவர் இரா.முரளி கிருட்டினன்
திருமிகு.இ.யோகராஜ்
முனைவர் லா.சார்லஸ்
முனைவர் போ.ஜான்சன்
திருமிகு.டே.எட்வின் சார்லஸ்
முனைவர் ஜா.ஸ்டெல்லா மேரி
முனைவர் கா.ஜான் கென்னடி
முனைவர் ம.தனலெட்சுமி
திருமிகு. மா.ராஜா


**தொடர்பு முகவரி**

**திருமிகு. சி. பாக்கிய செல்வ ரதி,** கருத்தரங்கச் செயலர்,
உதவிப்பேராசிரியர் & துணை முதல்வர் (பணிமுறை - II),
தமிழாய்வுத்துறை,தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி - 600 002
**தொலைபேசி : 0431 - 4226401 அலைபேசி : 96988 40056**